Cr.M.P.No.1569/2025
in CC.No.28/2023
PW1 – சாலியா பானு
நாள் 22.10.2025, 01.35 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** 1ம் எதிரி என்னுடைய கொழுந்தன் என்றால் சரிதான். 3வது எதிரி கபிபா எனது கொழுந்தனின் மனைவி என்றால் சரிதான். 2வது எதிரி சதக் எனது கணவரின் சகோதரின் கணவர் என்றால் சரிதான். 4வது எதிரி ரவி எனது கணவரின் சகோதரின் மகன் என்றால் சரிதான். 4வது எதிரி புலாங்குளத்தில் குடியிருந்து வருகிறார். 2வது எதிரி முதுகுளத்தூரில் குடியிருந்து வருகிறார். 3வது எதிரி கபிபா கொடுத்த புகாரில் எனது கணவர் மீது ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்றால் சரிதான். எனது கணவர் அவரது தாயாரை அடித்ததாக ஒரு வழக்கு பதிவு செய்யபட்டது என்றால் சரிதான்.

**2.** எனது கணவர் மேற்படி வழக்கில் கைதாகி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு 3 மாதங்களுக்கு மேல் சிறையில் இருந்தார் என்றால் சரிதான். எனது கணவர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து என்னுடமும் மற்றவருடனும் தகராறு செய்வதால் அவரை ஜாமினில் எடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் சிக்கலில் தையல் வேலை பார்த்து வந்தார். தினமும் குடித்துவிட்டுதான் வீட்டிற்கு வருவார் என்றால் சரிதான். நாங்கள் வீட்டிற்குள் இருக்கும்போதுதான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான்.

**3.** எங்களுக்குள் இடம் பகிர்வது சம்பந்தமாக அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் சரிதான். 10.03.2022ம் தேதி இரவு 10.30 மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சம்பவ நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். எனது கணவருக்கு காயம் ஏற்பட்டு சத்தம் கேட்டுதான் நான் வெளியே வந்தேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு வலது முட்டிகாலில் காயம் ஏற்பட்டது. நடுதலையில் காயம் எதுவும் இல்லை. நாங்கள் ஒரு கூரை கொட்டகையில் குடியிருந்து வருகிறோம். அதற்கு எதிர்புறம்தான் மேற்கே 2 வீடும் கிழக்கே 2 வீடும் பிரிந்து உள்ளது என்றால் சரிதான். 1வது எதிரிக்கு ஒரு வீடும், அவர் தம்பிக்கு ஒரு வீடும்

ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.** என்னையும் தினமும் குடித்துவிட்டு வந்து அடிப்பார் என்றால் சரிதான். நானும் என் கணவர் மீது காவல் நிலையத்தில் பல தடவை புகார் கொடுத்துள்ளேன். எனது கணவரை போலிசார் கண்டித்தும் அவர் திருந்தியபாடு இல்லை. எனது கணவர் மது குடித்துவிட்டு அடிக்கடி கீழே விழுந்துவிட்டு வருவது வழக்கம் என்றால் சரிதான். அவர் காயத்தோடு வந்தாலும் நான் அவருக்கு பசிக்கும் என்பதால் நான் சாப்பாடு வைப்பது வழக்கம் என்றால் சரிதான். சம்பவ நேரம் 3வது எதிரி கபிபா எனது கணவரை தாக்கவில்லை என்றால் சரிதான்.

**5.** போலிசாரிடம் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சம்பவம் நடந்த அரை மணி நேரத்தில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் வந்தபிறகு ஆம்புலன்ஸ் வந்துவிட்டது. போலிசார்தான் சம்பவ இடத்தில் இருந்து 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள். ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்றால் 11.30 மணிக்கு வந்துவிட்டது. 108 ஆம்புலன்ஸில் நானும், போலிசாரும் சேர்ந்துதான் மருத்துவமனைக்கு ஏற்றினோம். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் நாங்களும், எதிரிகளும் தவரி வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து வேறு யாருக்கும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

**6.** எனது கணவரை கட்டை கம்பால் அடித்தார்கள் சல சல வென்று சத்தம் கேட்டது. எந்த மாதிரியான கட்டை என்று தெரியவில்லை. சம்பவ நேரம் இருட்டான நேரம் என்பதால் கட்டை என்றோ கம்பி என்றோ எனக்கு சரியாக தெரியவில்லை. இருட்டில் கூட்டமாக எதிரிகள் தாக்கியதால் எந்தேந்த எதிரிகள் எந்த ஆயுதம் வைத்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சம்பவத்தன்று அதிகாலை 01.40 மணிக்கு சென்றோம். எனது கணவருக்கு மருத்துவமனைக்கு செல்லும் வரை சுயநினைவு இல்லை. எனது கணவருக்கு மறுநாள்தான் சுயநினைவு வந்தது. மருத்துவமனையில் மருத்துவரிடம் எனது கணவரை யார் அடித்தார் எதை வைத்து அடித்தார்கள் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் நான்தான் சொன்னேன்.

**7.** நான் மருத்துவரிடம் எனது கணவரை கத்தியாலோ கம்பியாலோ தாக்கினார் என்று சொன்னேனா என்றால் இல்லை. மருத்துவரிடம் எனது கணவரை எத்தனை பேர் அடித்தார்கள் என்று சொன்னேனா என்றால் இல்லை. எனது கணவர் மயக்கமாக

இருந்ததால் அவரும் சொல்லவில்லை.

**8.** எனது கணவருக்கு வலது முழங்காலிலும், நெற்றியிலும் தவிர வேறு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எந்த நடந்தது என்று கூறி போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் மறுநாள் காலையில் என் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்து என்னிடம் புகார் வாங்கினார்கள். புகாரில் நான்தான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியுள்ளது என்றால் நான் என்ன சொன்னேனோ அதை தான் எழுதினார்கள். மறுநாள் என்னிடம் புகார் வாங்கியபிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**9.** நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எனது கணவர் மது குடித்துவிட்டு கீழே விழுந்ததால்தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இருந்த இடப்பிரச்சனை சம்பந்தமாக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டில் வைத்து புகார் கொடுத்த விவரம் எனது கணவருக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் சம்பவ நேரத்தில் வேலை நிமித்தமாக வெவ்வேறு ஊரிகளில் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

**10.** அடித்த கம்பை அந்த இடத்தில் போட்டுவிட்டு சென்றார்களா இல்லை கையில் கொண்டு சென்றுவிட்டார்கள். 1வது எதிரி சம்பவ சமயத்தில் கூரி ஊரியில்தான் குடியிருந்தார் என்றால் சரியல்ல. சாட்சி மைமூன் பீவி எனது பெரியம்மா மகள் ஆவார். சாட்சி ராசாஉசேன் எனது அக்கா மைமூன் பீவியின் மகன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி